மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்தப் புகார் வந்தபிறகு நடவடிக்கை எடுக்கப்பட்டு வெகு சீக்கிரத்தில் கார்டுகள் பரிசோதனை செய்யப்படவேண்டும் என்ற உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

திரு. மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, 1967-ம் ஆண்டுக்கு முன்பெல்லாம் இந்த மாநிலத்தில் அரிசிப் பற்ருக்குறை இருந்த போது நாம் மத்திய அரசு "பூல்" இலிருந்து பெற்று வந்தோம். இந்த ஆண்டு மத்திய அரசு "பூலுக்கு" நம்முடைய மாநிலத்திலிருந்து எவ்வளவு அரிசி கொடுக்கப்பட்டது? அப்படிக் கொடுக்கப்பட்டிருந்தால் எவ்வளவு டன்கள் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்தக் கேள்வி வராது.

Major Panchayats as Municipalities

* 150. *Q.*—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the number of Town Panchayats which have been upgraded as Municipalities in 1970 in Tamil Nadu; and

(*b*) whether special officers have been appointed for the above newly constituted Municipalities ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) 6. நாமக்கல், பல்லவபுரம், சாத்தூர், துறையூர், சத்தியமங்கலம், விருத்தாசலம் பேரூராட்சிகள், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்கீழ் 17–1–70 முதற் கொண்டு நகராட்சிகளாக மாற்றப்பட்டன.

(இ) ஆம்.

THIRU T. MARTIN : May I request the Hon. Minister to state whether Government previously consulted the Director of Rural Development before appointing these Special Officers or Government itself directly selected these officers and appointed them as special officers ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, கிராம வளர்ச்சித் துறை இயக்குநரிடம் இருந்து தகவல் பெறப்பட்டுத்தான் இந்த அதிகாரிகள் தற்காலிகமாகப் பொறுக்கி எடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. ந. தருமலிங்கம் : பேரூராட்சிகளை நகராட்சிகளாக ஆக்குகின்ற அடிப்படையில் திருத்துறைப்பூண்டி பேரூராட்சியை நகராட்சியாக ஆக்கவேண்டுமென்று அங்கே தீர்மானம் நிறைவேற்றி அனுப்பினார்களே, அதுபற்றி இந்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, அது பற்றித் தகவல் இல்லை. ஆனால் தற்போது 30 பேரூராட்சிகளை நகராட்சிகளாக மாற்றவேண்டுமென்று ஒரு செயற்குறிப்பு வந்திருக்கிறது. இப்போது மக்கள் தொகைக் கணக்கெடுப்பை மத்திய அரசாங்கம் நடத்திக் கொண்டிருக்கிற காரணத்தினால் எந்த வித

மாற்றங்களையும் செய்யக்கூடாது என்று மத்திய அரசு தடை விதித்திருக்கிற காரணத்தினுல் அந்தச் செயற்குறிப்பை அரசாங்கம் நிறுத்தி வைத்திருக்கிறது.

திரு. என். வரதராஜன் : பேரூராட்சிகளை நகராட்சிகளாக மாற்றுகின்ற வகையில் தமிழ்நாட்டில் இதுவரையில் எத்தனை மாற்றப்பட்டிருக்கின்றன ? இதிலே தேர்தல் நடத்தப்படாத நகராட்சிகளுக்கும் புதிதாக அறிவிக்கப்பட்டிருக்கிற நகராட்சிகளுக்கும் எப்போது தேர்தல் நடத்த அரசு உத்தேசித்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஏற்கனவே 84 நகராட்சிகள் இருக்கின்றன. இந்த ஆண்டில் 6 புதிய நகராட்சிகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆக மொத்தம் 90 நகராட்சிகள் இருக்கின்றன. அவற்றைத் தவிர, ஆவடி, அம்பத்தூர், சுத்திவாக்கம், மாதவரம் போன்றவை நகராட்சித் திட்டத்தின்கீழ் டவுன்ஷிப்புகளாக அமைக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சில நகராட்சிகளில் தேர்தல் முடிந்தும் சிலவற்றில் முடியாமலும் இருக்கின்றன. அவைகளில் சில, வழக்கு மன்றங்களில் இருக்கின்றன. அதைப்பற்றி நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டு வருகிறது.

THIRU T. MARTIN : May I know from the Hon. Minister the number of Special Officers whose names were sent by the Director of Rural Development in the list submitted by him to Government?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அது பற்றிய விவரம் ஏதும் இல்லை. தனிக் கேள்வி போட்டால் தகவல் தரலாம்.

* 151 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தாலூக்கா குத்தாலம் மேஜர் பஞ்சாயத்தினை நகராட்சி மன்றமாக ஆக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முந்தைய கேள்விக்குப் பதிலளிக்கையில் 30 பேரூராட்சிகளை நகராட்சிகளாக ஆக்குவதற்கு பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்தார்கள். அந்த 30 பேரூராட்சிகளில் குத்தாலம் ஒன்று என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே பதிலளிக்கையில் 30 பேரூராட்சிகளை நகராட்சிகளாக மாற்றுவதற்கான ஒரு செயற்குறிப்பு வந்ததாகவும், ஆனுல் அது மத்திய அரசு தடைசெய்த காரணத்தினுல் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் சொன்னேன். அந்த 30 பேரூராட்சிகளில் குத்தாலமும் இருக்கிறதா என்ற விவரம் இல்லை.